Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழர்களது நாட்டியநாடக நிகழ்த்துக்கலையும், அதில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும் அதன் வகிபங்கும்.

4

**சுதாகரன் லோவிகரன்**
**முதுகலைமாணி இசை,மிருதங்கம்**
**மகாத்மாகாந்தி பல்கலைக்கழகம், திருபுணித்துரா, எர்ணாக்குளம்,கேரளா.**
Gmail id :- lovikaran20@gmail.com ,

**ஆய்வு முன்மொழிவு**

**ஆய்வுச் சுருக்கம்:-**

'தமிழர்களது நாட்டியநாடக நிகழ்த்துக்கலையும், அதில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும் அதன் வகிபங்குகளும்' எனும் தலைப்பில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாழ்வானது முதலாவது குறுந் தலைப்பில் நாட்டியநாடகம் சம்பந்தமான தெளிவினையும் அதன் பொருள் அமைப்பினையும் கூறி அத்தோடு நாட்டியநாடகம் ஆரம்ப காலங்களில் எவ்வாறு அழைக்கப்பட்டன என்பது பற்றியும், இத்தகைய நாட்டிய நாடகத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் பெயர்களும் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஆரம்ப காலங்களில் காணப்பட்ட ஆடல் வகைகளின் கட்டமைப்புகளையும் கூறி நிற்கின்றது. இத்தோடு நாட்டியநாடகத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும், இதில் தாள வாத்தியங்கள், ஸ்ரவாத்தியங்கள் என இரு வேறுபட்ட இசைக்கருவிகளின் பெயர் பட்டியல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தோடு நாட்டிய நாடகங்களில் பயன்படுத்தப்படும் நவீன இசை கருவிகளும், இத்தகைய நவீன இசைக்கருவிகள் மற்றும் பழமை வாய்ந்த இசைக்கருவிகளின் ஓசை வெளிப்பாடினை விரிவுபடுத்தும் ஒலிபெருக்கி சம்பந்தமான கருவிகள் பெயர் பட்டியலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நாட்டிய நாடகத்தின் கருப்பொருள் என்னும் தலைப்பினூடாக நாட்டிய நாடகம் எத்தகைய கதை கருவினை தெரிவு செய்யப்படுகின்றது என்பது குறித்தும், அத்தகைய கதை கருவின் ஊடாக பார்வையாளர்களை எவ்வாறு திருப்திபடுத்த முடியும் என்பது குறித்தும் கூறப்பட்டுள்ளது. இத்தோடு நாட்டியநாடகத்தில் இசைக்கருவிகளின் வகிபங்கு என்னும் தலைப்பின் ஊடாக நாட்டியநாடகம் ஒன்றில் எவ்வாறான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறித்தும் அத்தகைய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை உதாரணங்கள் காட்டி விளக்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து இறுதியாக தொகுப்புரையில் நாட்டிய நாடகம் ஆரம்ப காலங்களில் எவ்வாறான முறையில் காணப்பட்டது என்பது குறித்தும் தற்காலத்தில் எத்தகைய கலைவடிவங்களுடன் ஒன்றிணைந்து செயல்படுகின்றது என்பது குறித்தும், இனிவரும் காலங்களில் பரதநாட்டியம் வேறு எந்த கலைகளுடன் தொடர்பு கொள்ளும் என்பது குறித்தும் தொகுப்புரையில் கூறி தலைப்புக்கும் இவ்வாய்வுக்குமான பொருத்தப்பாட்டினை இறுதியாக கூறி இவ்வாறு முற்றுப் பெற்றுள்ளது.

**ஆய்வு நோக்கம் :-**

தமிழர் கலைகள் தொன்மை காலங்களில் இருந்து தற்கால நவீன காலம் வரை வளர்ச்சி பெற்று வந்துள்ள போதிலும் தமிழர் கலைகலாச்சாரத்தில் வேறுபட்ட இரு கலை வடிவங்கள் ஒன்று

இணைந்து சிறப்புமிக்க ஆற்றுகை கலையாக உருப்பெற்றிருகின்ற விதத்தினை எடுத்துரைப்பதற்காகவும், அவ்வாறு உரு பெற்றிருக்கின்ற நாட்டிய நாடகத்தில் பயன்படுத்தப்படும் எம்மவர் இசைக்கருவிகள் எந்த அளவுக்கு செல்வாக்கு பெற்று இருக்கின்றது என்பது குறித்தும், தற்கால நவீனயுகத்தின்பால் இசைக்கருவிகளின் நவீன போக்கும், அத்தோடு இசைக்கருவிகளை மெருகூட்டி பயன்படுத்துவதற்கு பின்துணையாய் இருக்கும் நவீன ஒலிபெருக்கிகளின் பயன்பாடு சார்ந்து விரிவாக கூறுவதற்காகவும் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு முறை :-**

இவ்வாய்வு முழுமையாக தமிழர் கலைகளை ஆய்வுக் களமாகக் கொண்டமையினாலும், பழந்தமிழ் இலக்கிய ஆதாரங்களை சுட்டி காட்டி இவ்வாய்வு மேற்கொண்டமையினாலும் **இலக்கிய ஆய்வாகவும்**, தமிழர்கள் கலை, கலாச்சாரத்தினை விபரிப்பதாக உள்ளமையினால் **விபரண ஆய்வாகவும்** காணப்படுகிறது.

**திறவுச் சொல்:** தமிழர் கலைகள்,நிகழ்த்துக்கலை,வகிபங்கு, இசைக்கருவிகள்

**தமிழர்களது நாட்டியநாடக நிகழ்த்துக்கலையும், அதில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும் அதன் வகிபங்கும்.**

தமிழர்கள் இவ்வுலகத்தின் தொன்மைகுடியென பல ஆய்வாளர்கள் தத்தம் ஆராய்ச்சியின் பயனாக பல உண்மை தகவல்களைப் பறை சாற்றி நிற்கின்றனர். இதன் அடிப்படையில் தமிழும் தமிழர் கலை, கலாச்சாரங்களும் பண்டைய காலம் முதல் தற்கால நவீன காலம் வரை பேணப்பட்டும், வளர்க்கப்பட்டும் வந்துள்ளது.

இதன் அடிப்படையில் தமிழர் அடையாளமும், அடையாள நீட்ச்சியுமாக காணப்படுவதுள் நாட்டியநாடகமும் குறிப்பிடத்தக்க கலைவடிவமாகும்.

- **நாட்டிய நாடகம் சார்ந்த கண்ணோட்டம்.**

நாட்டியநாடகமானது நாட்டியம் + நாடகம் எனப் பிரிந்து நடனம் மற்றும் நாடகக் கதை கருவினை பிரதானமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் கலை வடிவமாகும். இதன் அடிப்படையில் தனி பாடல்களுக்கு அபிநயம் கொடுத்து ஆடப்படுவதை நாட்டியம் என்றும், கதைகளை தழுவி வேடமிட்டு ஆடுவதை நாடகம் என்றும் தொன்மை காலத்தில் எம்மவர் கூறியுள்ளனர். இவ்விரண்டு வேறுபட்ட கலை வடிவங்கள் ஒன்றிணைந்து அரங்கேறும் பொழுது அதனை நாட்டியநாடகம் என நாம் பெயர் கூற முடியும்.

இத்தகைய கலைவடிவத்தினை பண்டையோர் கூத்து என்று அழைத்துள்ளனர். கூத்து ஆடுபவனை **கூத்தன்** என்றும் **விறலியர்** என்றும்,

**'அம்பலத்தாடும் கூத்தன்'**

என்று சிவனை அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**( முனைவர் சே. இரகுராமன், தமிழர் நடன வரலாறு,**

**முதல் பதிப்பு – 2006, பக்கம் - 8 )**

பாடல் இசைப்பவனை பாணன், பாடினி என்றும், தாளவாத்தியங்கள் வாசிப்பவனை பறைவினைஞன் என்றும், யாழ் இசைப்பவன் யாழோன் என்றும், புல்லாங்குழல் இசைப்பவனை குழலோன் என்றும் பண்டைய கால இலக்கியமான சிலப்பதிகாரம் பறை சாற்றி நிற்கின்றது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சங்க இலக்கியங்களில் நடன வகைகள் குரவை, துணங்கை, வெறியாட்டம் என்று மூன்று பகுதியாக காட்டப்பட்டுள்ளது. இத்தகைய நடன வகைகளை சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் காணக்கூடியதாக இருக்கும்.

இத்தோடு திருக்குறள், அதிகாரம் - நிலையாமையில்

**"கூத்தாடும் அவை குழாத்து அன்றே**

**பெரும் செல்வம் போக்கும் அது விளிந்தற்று"**

என கூத்தாடும் அவை என்பது சங்க காலத்தில் ஆடல் நிகழ்த்துவதற்காக பிரத்தியேகமாக காணப்பட்ட ஆடல் அரங்கம் எனக் கூறப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக கூத்தாடி பிழைக்கும் தொழிலை செய்யத்தகாத தொழில் என சில இலக்கியஆதாரத்தின் பால் அறியக்கூடியதாகவும் இருக்கின்றது. அதாவது சான்றோன் எங்கெல்லாம் சென்றால் அவனுக்கு தாழ்வும்,அழிவும் வரும் என்பதனை ஏலாதி என்னும் நூலின் பாடல் கூறுகின்றது.

**"கூத்தும் விழவும் மணமும் கொலைக் களமும்**
**ஆர்த்த முனையுள்ளும் வேரிடத்தும் - ஒத்தும்**
**ஒழுக்கம் உடையவர் செல்லாதே செல்லின்**

**இழக்கம் இழவும் தரும்"**

**( முனைவர் சே. இரகுராமன், தமிழர் நடன வரலாறு ,**

**முதல் பதிப்பு – 2006இ பக்கம் - 52 )**

அதாவது அறிஞர்கள் கூத்து நடைபெறும் இடத்திற்கு செல்ல மாட்டார்கள். சென்றால் அவர்கள் தாழ்ந்து போய்விடுவார்கள். மேலும் அவர்களுடைய பொன்னும், பொருளும் இழந்து போய்விடும் என இப்பாடலின்பால் கூறி நிற்கின்றது.

இத்தோடு அக்காலத்தில் ஆடிப்பிழைப்பு நடத்துவது ஒரு இழிவான செயலாக கருதப்பட்டுள்ளதாக கைநிலை பாடல்கள் கூறி நிற்கின்றது.

**'நீர்த்தம் நீர் ஊரன் நிலைமையும் வண்ணமும்**

**யார்க்கு உரைத்தி பாண? அதனால்யாம் என் செய்தும்**

**கூத்தனாக் கொண்டு குறைநீர் உடையைலே;**

**ஆட்டுவித்து உண்ணினும் உன்'**

:- பாணா? நீ இங்கு வந்து உன் தலைவன் பெருமையை பேசாதே. நீ உன் உணவு, உடைக்காக செல்வத்தை உனது தலைவனை ஆடச் செய்து அதனால் பெறுக. இங்கு வருவதை தவிர் என்கின்றாள். இவ்வாறு பண்டைய காலத்தில் சிறப்புற ஆடப்பட்ட கூத்துநாட்டிய கலை வடிவம் அக்காலத்தின் சந்தர்ப்பங்களுக்கேற்ப இழிவாகப் பேசப்பட்ட கலை வடிவமாகவும் காணப்பட்டுள்ளது.

**( முனைவர் சே. இரகுராமன்இ தமிழர் நடன வரலாறுஇ**

**முதல் பதிப்பு – 2006இ பக்கம் - 52 )**

இருப்பினும் தமிழர் கலை கலாச்சார பாரம்பரியத்தில் ஒரு கூறாக காணப்படும் நடனக்கலை ஆதிசிவன் தாண்டவமாக ஆடப்பட்டுள்ளதாலும், தற்காலத்தில் முறைப்படுத்தப்பட்ட நடன கலை வடிவமாக பேணப்படுவதாலும், இசை, கதை, நடனம் என மூன்று துறைளும் ஒன்று சேர்ந்த கலைவடிவமாக காணப்படுவதனாலும் நம்மவர் தமிழர் கலை கலாச்சாரத்தில் நாட்டியநாடகம்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

முதன்மை பெற்ற காணப்படுகின்றது.

இதன் அடிப்படையில் கதை தழுவிய கூத்து நாடகம் எனப்பட்டது. பழங்காலத்தில் நாடகம் என்பது நடன நாடகமாக அதாவது இசையும், ஆடலும், வசனமும் இணைந்ததாகவே விளங்கியது. ஆடல், பாடல், கவிநயம் இணைந்து கதை தழுவி மக்களை கவரும் கூத்து வகையே நாட்டியநாடகமாக இன்று திகழ்கின்றது.

நாட்டிய நாடகத்தில் கதையின் முழு அம்சத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் இதன் பாடல்களின் கருத்துக்கள் அமைந்திருக்கும். அந்தக் கருத்துக்களின் உணர்வுகளை முக பாவங்கள் கை, கால் மற்றும் அங்க அசைவுகள் மூலம் பல்வேறு ஒப்பனைகளுடன் நிகழ்த்திக் காட்டப்படும். இதில் பாத்திரங்களுக்கேற்றவாறு உடை, ஒப்பனை, அலங்காரம் செய்து காலில் சலங்கை கட்டி நிகழ்ச்சியை அரங்கேற்றம் செய்வர்.

இதனை சதிராட்டம், சின்னமேளம், தாசிஆட்டம் என ஆரம்பகாலங்களில் அழைக்கப்பட்டாலும் தற்காலத்தில் பரதநாட்டியம் என்று அழைக்கப்படுகின்றது.

நாட்டிய நாடகத்தில் கிராமிய இசை மெட்டும், ஜதிகளும் அமைந்திருக்கும். இத்தோடு நாட்டியநாடகத்தினை பெரும்பாலும் பெண்களே நடத்திக் காட்டுவர். அதில் ஆண் வேடத்தை பெண்களே ஏற்றம் நடிப்பர்.

இதற்கமைய நாட்டியநாடகத்தில் அடங்குகின்ற கதையின் கருப்பொருள் எவ்வாறு காணப்படுகிறது என்பது பற்றி பின்வருமாறு நோக்கப்பட்டுள்ளது.

- **நாட்டியநாடகத்தின் கதைக்கருப்பொருள்**

நாட்டிய நாடகம் ஆடலும் கதையும் இணைந்த அவை ஆற்றுகை நிகழ்வாகும். இதில் கதை கருப்பொருள் மிக முக்கியமான ஒன்றாகும். இவற்றுள் பரதநாட்டியம் செவ்வியல் கலை வடிவமாக காணப்படுவதால் நாட்டியநாடகத்தில் செவ்வியல் சார்ந்த நடன கூறுகளாக புஷ்பாஞ்சலி, வர்ணம், பதம், தில்லானா ஆகியவை உள்ளடங்கலாகவும் கதைக்கருக்கள் காணப்படும்.

இத்தோடு கதை என்று நாம் நோக்கும்போது புராண இதிகாச கதைகளாகவோ, சமுதாயத்தில் சித்தரிக்கப்பட்ட நாடகக் கதைகளாகவோ, நிகழ்காலத்தின் பொருத்தமான விடுதலை கதைகளாகவோ, ஒரு வாழ்க்கையினை சித்தரிப்பதாகவோ, ஒரு அரசன் அல்லது ஜமீன்தார் பற்றியோ தெரிவு செய்யக்கூடும். இதில் காதல், வீரம், சோகம், பிரிவு போன்ற பல உணர்வுகள் பார்ப்போர் மனதை தூண்டும் வண்ணம் அமைந்திருக்கும்.

(**இணைய வழியில்** :- https://www.tamilvu.org/ta/courses-diploma-d061-new-d0614-html-d06145l1-46555)

இதற்கு நல்ல உதாரணமாக குறவஞ்சி நாட்டியநாடகத்தை கூறமுடியும். கவிக்குஞ்சரபாரதியாரின் அழகர் குறவஞ்சி

1. திருக்குற்றால குறவஞ்சி
2. கும்பேசர் குறவஞ்சி
3. விராலிமலை குறவஞ்சி
4. தியாகேசர் குறவஞ்சி
5. குமரலிங்க குறவஞ்சி
6. செந்தில் குறவஞ்சி

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

7. தமிழரசி குறவஞ்சி
8. சரபேந்திரபூபால குறவஞ்சி
9. பெத்லகேம் குறவஞ்சி

**( முனைவர் பி.டி.செல்லத்துரை சே.ச, தென்னக இசையில், இறுதிப் பதிப்பு 2020, பக்கம் - 111 )**

மேலும் பின்வரும் கதைக்கருக்களை தற்காலத்து நாட்டியநாடகத்திற்கு உதாரணமாக கூறலாம்.

**இராவணேசன் நாடகம்**

1. சீதா ராமன் சுயம்வரம்
2. ராமன் வனவாசம்
3. மகாபாரத கதை களம்
4. வீரமங்கை வேலுநாச்சியார் வாழ்க்கை வரலாறு
5. சரஸ்வதி சபதம்
6. பாரியின் வாழ்க்கை வரலாறு
7. சிவன் நஞ்சுண்டகதை
8. கோவலன் கண்ணகி வரலாறு
9. கண்ணனின் லீலைகள

என்பன குறிப்பிடத்தக்கது.

**( மா.ராஜுஇ தென்னிந்திய மரபு இசை இயல்இ முதலாம் பாகம்இ**

**முதல் பதிப்பு – 2012 )**

இத்தகைய கதை கருவிற்கு ஏற்றால் போல் பாடல் வரிகளை புதிதாக உருவாக்கி அல்லது பழைய பாடல்களை நெறிப்படுத்தியோ நாட்டியநாடகம் ஒழுங்கமைப்பும் செய்யப்படும். நாட்டியநாடகம் கதை தழுவியதாக காணப்பட்டாலும் நாட்டிய அடவு, கோர்வை, ஜதி அமைப்புகள், நடைப்ரகாரங்கள் என்பன உட்பொருளாகவும் காணப்படும். அதாவது நாட்டியத்தின் பாணியில் கதை கூறும் நாடகப் பாரம்பரியம் நாட்டியநாடகம் என்பதாகும்.

இதன் அடிப்படையில் நாட்டியநாடகத்தில் கதை கருப்பொருள் எதுவாக இருந்தாலும் அத்தகைய கதை கருப்பொருளை காண்பிப்பதற்கு ஏராளமான இசை கருவிகள் பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய இசைக்கருவிகள் கதை கருவின் பிரதான கதாபாத்திரம் மற்றும் இதர கதாபாத்திரங்களை சித்தரிப்பதற்காகவும், கதையின் ஓட்டத்தினை காட்டுவதற்காகவும், பாடல் இசைக்கு பக்கமாக வாசிக்கப்படுகிறது. அத்தகைய இசைக்கருவிகள் எவை என்பது குறித்தும், இசைக்கருவிகளின் பயன்பாடு அல்லது அதன் வகிபங்கு எவ்வாறு காணப்படுகிறது என்பது குறித்தும் பின்வருமாறு நோக்கப்பட்டுள்ளது.

**• நாட்டியநாடகத்தில் இசைக்கருவிகள்**

நாட்டியநாடகம் தமிழர் கலைகளான நாடகம், நாட்டியம் ஆகிய இரண்டும் ஒன்றிணைந்த இருவேறுபட்ட கலை வடிவமாகும். நாட்டியநாடகம் எம்மவர் கலை வடிவத்தில் ஒரு பிரதான கதைகருவினை ஆதாரமாகக் கொண்டு பல கதாபாத்திரங்கள், பல பக்கவாத்தியக்கலைஞர்கள், பாட்டுக்காரர்கள் என பலர் பங்கு கொள்ளும் கலை வடிவம் ஆகும். இதன் அடிப்படையில் இத்தகைய இசைக் கருவிகளை பின்வரும் சிறிய இரு தலைப்புகள் ஊடாக நோக்க முடியும்.

- பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்
- இசைக்கருவிகளின் வகிபங்கு

- **நாட்டியநாடகத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்**

இசை எப்பொழுது தோற்றம் பெற்றதோ அதுபோல இசைக்கருவிகளும் இசையினை அனுசரித்து தோற்றம் பெற்றுவிட்டன. இதன் அடிப்படையில் இயற்கை மூலதன பொருட்களை அடிப்படையாக வைத்து பல இசைக்கருவிகள் ஆரம்ப காலங்களில் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய இசைக்கருவிகள் தாள வாத்திய இசைக்கருவிகள், ஸ்வரவாத்திய இசைக்கருவிகள் என அதன் பாகங்கள், வாசிக்கும் அமைப்பு முறைகளை அடிப்படையாக வைத்து இரு பிரிவுகளாக பிரிக்க முடியாது. இதன் அடிப்படையில் நாட்டியநாடகத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளின் பெயர் பட்டியல் பின்வருமாறு,

- **தாளவாத்திய இசைக்கருவிகள்**

1. மிருதங்கம்
2. உடுக்கை
3. இடக்கை
4. மத்தளம்
5. கஞ்சிரா
6. கடம்
7. பஞ்சவாத்தியம்
8. தவில்
9. பறை
10. பக்காவாச்
11. தபேலா
12. கோல் வாத்தியம்
13. செண்டா

- **ஸ்வர வாத்தியங்கள்**

1. வீணை
2. வயலின்
3. தம்பூரா
4. புல்லாங்குழல்
5. நாதஸ்வரம்
6. சங்கு
7. ஹார்மோனியம்

- **நவீன இசைக் கருவிகள்**

தமிழர்கள் இயற்கையாக பெறப்பட்ட மூலதனப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப கால முதல் தற்காலம் வரை பல இசைக்கருவிகளை உருவாக்கி தம் இசை மற்றும் நடன கலைவடிவங்களில் பயன்படுத்தி வந்துள்ளனர். இருப்பினும் தற்கால நவீன யுகத்தின் வளர்ச்சியின்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

விளைவாக இசை மற்றும் நடன ஆற்றுக்கையின் போது பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் ஒரு சில இலத்திரனியல் அல்லது மின்னியல் இசைக்கருவிகளாக உருப்பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில் மின்னியல் இசைக்கருவிகள் தற்காலத்தில் சிறிதளவு நாட்டியநாடகத்திலும் பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய இசைக்கருவிகள் பெரும்பாலும் இயற்கையான தாளவாத்தியம், ஸ்வர வாத்தியங்களின் இருந்து உருப்பெற்ற ஓசையினை ஒலிப்பதிவு செய்து உருவாக்கப்பட்டவைகளாகும். நாட்டியநாடகத்தில் இவ்வாத்தியங்கள் தேவைக்கு ஏற்ப இடையிடையே வாத்தியங்களின் இலகுவிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

அதன் அடிப்படையில் நாட்டியநாடகம் மற்றும் இசை, நடனம் என்பவற்றில் பயன்படுத்தப்படும் நவீன மின்னியல் இசைக்கருவிகளை இரு பிரிவுகளின் அடிப்படையில் பட்டியல்படுத்த முடியும்.

- **இசையின் ஓசைகளை உண்டாக்கக்கூடிய கருவிகள்**

1. Roland octapad
2. Organ
3. electric flute
4. electric veena
5. keyboar

- **இசையின் ஓசைகளை வெளியில் பரப்பும் கருவிகள்**

1. Mixer
2. Amplifier
3. Mike
4. sound card
5. sound Out box
6. sound equalize

- **நாட்டியநாடகத்தில் இசைக்கருவிகளின் வகிபங்கு**

நாட்டியநாடகம் கதையோடு நடனம் ஆடி பார்வையாளர்களை மகிழ்விக்கச் செய்யும் ஆடல் கலைவடிவமாகும். இக் கலைவடிவம் அவையாற்றுகையில் அரங்கேறும் போது எமக்கு கதைக்கரு தெளிவாக தெரிந்தாலும் அதில் கூறப்படும் சந்தர்ப்பங்களை இசைக்கருவிகளின் பால் சிறப்பாக நோக்க முடியும். இதன் அடிப்படையில் நாட்டியநாடகத்தில் கதைக்கும், கதையின் கருப்பொருளுக்கும் ஏற்ப பல இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் ஒவ்வொரு இசைக்கருவியும் கதையின் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப்படுகிறது.

குறிப்பாக கதையையும் அதன் காட்சியையும் அவதானிப்பது போல பின்னணி இசையினையும், அதில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளையும் உற்று நோக்க வேண்டும். இவ்வாறு உற்று நோக்கும்போது இசைக்கருவியில் கதை கூறுவது போல தோன்றும்.

நாட்டியநாடகத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும் அதன் வகிபங்கும் எந்த அளவுக்கு காணப்படுகின்றது என்பது தொடர்பாக பின்வருமாறு ஆராயப்பட்டுள்ளதை நோக்கலாம்.

நாட்டிய நாடகத்தில் பிரதானமாக காணப்படும் தாள வாத்தியம் மிருதங்கம் ஆகும். இந்த தாள வாத்தியம் ஆடல் கலையின் முதன்மை வாத்தியமாகக் காணப்படுகின்றது. இத்தோடு வயலின், புல்லாங்குழல், வீணை என்பன நாட்டியத்தில் இசைக்கப்படும் இசைக்கருவிகளாக சிலப்பதிகாரத்தின்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அரங்கேற்றுக் காதையில் இசை முழக்கம் பகுதியில் பின்வரும் பாடல் அடிகளில் பறைசாற்றி நிற்கின்றது.

**“குழல்வழி நின்றது யாழே : யாழ்வழித் தன்னுமை நின்றது தகவே : தன்னுமைப்**

**பின்வழி நின்றது முழவே : முழவோடு கூடிநின்று இசைத்தது ஆமந் திரிகை :**

**ஆமந்தி ரிகையோடு அந்தரம் இன்றிக் கொட்டு இரண்டு உடையது ஓர் மண்டலம் ஆகக் கட்டிய மண்டிலம் பதினொன்றும் போக்கி”**

**( புலியூர்க் கேசிகன்இ சிலப்பதிகாரம் மூலமும் உரையும், முதற் பதிப்பு – 2022இ பக்கம் - 47 )**

இதற்கு மேலாக கதை கருவினை பிரதானமாகக் கொண்டும், கதாபாத்திரங்களின் இருப்பினை அடிப்படையாகக் கொண்டும் ஏனைய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

அதன் அடிப்படையில் நாட்டிய நாடகத்தில் ஒரு இயற்கைக் காட்சியை கதை சூழலுக்கு காட்டும் போது பின்னணி இசைகருவிகளாக புல்லாங்குழலும், அத்தோடு பூ மலரும் காட்சியினைக் காட்டுவதற்கு ஓகன் வாத்தியத்தில் இசையினை மீட்டியும், ஆலயத்தின் சூழல் மற்றும் மகிழ்ச்சிகரமான காட்சிப்பகுதியினை காட்டுவதற்காக மணி ஓசை மற்றும் வீணை வாத்தியத்தில் தானம் வாசித்தும் காண்பிக்க முடியும்.

இத்தோடு திருமணம் நடக்கின்ற காட்சியினைக் கதைச் சூழலாகக் காட்டுவதாயின் கெட்டிமேளம் வாசிப்பது போன்று தவில், நாதஸ்வரம், ஜால்ரா, சுருதிப்பெட்டி என்பன இசை கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கும்.

இதற்கு மேலாக நாட்டிய நாடகத்தில் கதை கருவாக போர் நடைபெறும் சூழல் காண்பிப்பதாக இருந்தால் போர் வாத்தியங்களாகக் காணப்படும் தமுறு, கொம்பு, சங்கு, செண்டை என்பனவும், பலத்த ஓசையை உண்டு பண்ணக்கூடிய உடுக்கை, இடக்கை இசை கருவிகள் பயன்படுத்தப்படும்.

இத்தோடு நாட்டிய நாடகத்தில் தெரிவு செய்யப்பட்ட கதை கருவில் நையாண்டி, கிண்டல், கேலி ஆகிய கதைச் சூழல் காணப்பட்டால் பார்வையாளர்களை கவரும் வண்ணம் இதில் தபேலா, டோலாக், மோசிங், முகவினை, கோல்வாத்தியம், ஹார்மோனியம், கடம் ஆகிய இசைக்கருவிகளும் பயன்படுத்தப்படும்.

இறுதியாக பக்தி உணர்வினையும், கடவுள் மீது காணப்படும் பய உணர்வினையும் பார்வையாளர்களுக்கு உணர்த்துவதற்காக மணி, சங்கு, உடுக்கை, இடக்கை, திமிலை, செண்டை, தவில் ஆகிய கலாச்சாரம் சார்ந்த இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

இவ்வாறு நாட்டியநாடகத்தில் தெரிவு செய்யப்பட்ட கதைகருவினை பார்வையாளர்கள் மத்தியில் கதையின் பால் சோர்வடையச் செய்யாமலும், கண், காது ஆகிய இரண்டினையும் ஓசை மூலமும், கதாபாத்திரங்களின் சித்தரிப்பின் மூலமும் நாட்டியநாடகத்தினை வெற்றிகரமான நடன நிகழ்வாக உருப்பெறச் செய்ய முடியும். இவ்வாறு நாட்டியநாடகத்தின் கதைகருவினை அனுசரித்து பல இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றது.

- **தொகுப்புரை**

தமிழர் கலை கலாச்சாரபாரம்பரியத்தில் காணப்படும் நாட்டியநாடகத்தினை பிரதானமாகக் கொண்டு அதில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள், அதன் வகிபங்கு என்னும் தலைப்பில் மேற்கொண்ட இவ் ஆய்வானது தமிழர் பாரம்பரிய கலைகலாச்சாரத்தில் நாட்டியம் மற்றும் நாடகத்தில் நடனத்தினுடைய

அம்சங்களும், நாடகத்தினுடைய அம்சங்களும் ஒன்றிணைந்து பார்வையாளர்களை கதையின் பாலும், இசையின்பாலும், நடனத்தின்பாலும் ஈர்க்கும் வண்ணம் நிகழ்த்தப்பகின்றது என்பதனையும்,

இத்தகைய நாட்டிய நாடகத்தில் ஏராளமான இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ள போக்கினை காணக்கூடியதாக உள்ளதினையும், கதை கூறும் கலை வடிவமாக நாட்டியநாடகம் திகழ்ந்தாலும் இசைக்கருவிகளின் மூலம் கதையின் உணர்வினை கூறும் பொழுது ஒரு சிறந்த நடன ஆற்றுகையாகக் காணப்படுகின்றது என்பதனையும் உணர்வுபூர்வமாக கூறி நிற்கின்றது.

**உசாத்துணை நூல் பட்டியல்**

1. புலியூர்க் கேசிகன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும்,முதற் பதிப்பு – 2022.
2. முனைவர் சே. இரகுராமன், தமிழர் நடன வரலாறு, முதல் பதிப்பு – 2006
3. https://www.tamilvu.org/ta/courses-diploma-d061-new-d0614-html-d06145l1-46555)
4. மா.ராஜு, தென்னிந்திய மரபு இசை இயல், முதலாம் பாகம், முதல் பதிப்பு – 2012
5. முனைவர் பி.டி.செல்லத்துரை சே.ச, தென்னக இசையியல், முதல் பதிப்பு 1984, இறுதிப் பதிப்பு 2020